# 7

# பரிசுத்தம்



# BIBLICAL HOLINESS

# 7

## எப்படிப் பரிசுத்தப்படக்கூடாது?

HOW NOT TO SANCTIFY

**1**

உங்கள் சுயபலத்தைச் சார்ந்திருக்கக்கூடாது.

**2**

உங்கள் பொறுப்பை மறந்துவிடக்கூடாது.

**3**

பாவத்தையே நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது.

**4**

தோல்விகளுக்குச் சாக்குபோக்குகள் சொல்லக்கூடாது.

**5**

செய்யத் தவறியவைகளைக் கவனியாதுவிடக்கூடாது.

**6**

பிறரோடு ஒட்டாது ஒதுங்கி வாழக்கூடாது.

**7**

சகவுறவுகளின் முக்கியத்துவத்தைக் குறைக்கக்கூடாது.

**8**

பக்தி முயற்சிகளைத் தளர்த்தக்கூடாது.

**9**

வெற்றிகளால் குருடாகிவிடக்கூடாது.

**10**

பரிசுத்தத்தில் வளருவதை நிறுத்தக்கூடாது.

# 7 எப்படிப் பரிசுத்தப்படக்கூடாது?

## அறிமுகவுரை

— பரிசுத்தமே நமது தேவனின் அதிவுன்னத குணம்.

ஏசா 6:3 ... *பரிசுத்தர் ... பரிசுத்தர் ... பரிசுத்தர் ...*

வெளி 4:8 ... *பரிசுத்தர் ... பரிசுத்தர் ... பரிசுத்தர் ...*

வேறெந்த குணாதிசயமும் இத்தனை முறை கூறப்படவில்லை.

''பரிசுத்தம்'' எனும் சொல் பைபிளில் 900 முறைக்கு மேல்!

— திரித்துவ தேவன் அறியப்படுவது பரிசுத்தத்தினால் ...

பிதாவானவர் பரிசுத்தர் (லூக் 1:49; யோ 17:11)

குமாரனானவர் பரிசுத்தர் (லூக் 1:35; அப் 3:14)

ஆவியானவர் பரிசுத்தர் (மத் 1:18; லூக் 1:15)

— மோசேயும் மக்களும் ஆராதித்த முதல் குறிப்பு

யாத் 15:11 ... *பரிசுத்தம் ... துதி ...அற்புதங்கள்*

இன்றோ நமது ஆராதனையில் *''பரிசுத்தம்''* அல்ல,

*''துதித்தலும்'' ''அற்புதங்களுமே''* நம்மை ஈர்க்கின்றன.

— தனி வாழ்வில் பரிசுத்தமே ஆசீர்வாதங்களிலெல்லாம் ஆசீர்வாதம்

அப் 3:26 ... *ஆசீர்வதிக்க ... அக்கிரமங்களிலிருந்து விலக்கி ...*

— இயேசுவின் பெயரே இவ்வுன்னத நோக்கைக் குறிப்பிடுகிறது.

மத் 1:21 ... ***தமது*** *மக்களின் பாவங்களை நீக்கி இரட்சிப்பார் ...*

■ பரிசுத்தம் என்பது ஒதுக்கி வைக்கப்பட்ட பாடமாயிற்று.

எத்தனையோ விசுவாசக் கருத்தரங்குகள், வல்லமை முகாம்கள்;

ஆனால் பரிசுத்தத்திற்கான மாநாடுகள் எங்கே?

பிரபல முழக்கங்கள்:

இயேசு நேசிக்கிறார், இயேசு விடுவிக்கிறார்,
இயேசு அழைக்கிறார், இயேசு ஜீவிக்கிறார், முதலியன.
ஆனால், ''இயேசு கவனிக்கிறார்'' ''இயேசு சுத்திகரிக்கிறார்''
என்றெல்லாம் கிடையாதா?

— கடவுளது மூன்று பிரதான குணாதிசயங்கள்:
சர்வ வல்லமை, சர்வ வியாபகம், சர்வ ஞானம்

இன்று அவரது சர்வ ''வியாபகம்,'' சர்வ ''ஞானம்'' என்பவைகளை விட அவரது சர்வ ''வல்லமையே'' முக்கியத்துவம் பெறுகிறது.

வல்லமைக்கு முன்னர் பரிசுத்தம் வரவேண்டும் —
2 நாளா 16:9 ... *கர்த்தரது கண்கள் ... வல்லமை ... உத்தமம்*

— பரிசுத்த ஆவி
இன்று ''ஆவி'' என்பதில்தான் ஆர்வமே ஒழிய
''பரிசுத்தம்'' என்பதிலல்ல.

■ நம்மைக் குறித்த தேவ அழைப்பும் விருப்பமும்:

1 தெச 4:3அ ... *தேவ சித்தம் ... பரிசுத்தம்*
:7 ... *பரிசுத்தத்திற்கே அழைப்பு*

நாம் பரிசுத்தமாக விரும்புவதைவிட
நம்மைப் பரிசுத்தமாக்க ஆண்டவர் ஆவலாயிருக்கிறார்.
என்னே ஊக்கம்!

## எப்படிப் பரிசுத்தப்படக்கூடாது?

### 1. உங்கள் சுயபலத்தைச் சார்ந்திருக்கக்கூடாது.
Do not depend on your strength.

- பைபிளில் ஒவ்வொரு புத்தகமும் ஒரு மையக் கருத்துள்ளது —
  லேவியராகமம் ''பரிசுத்தம்'' பற்றிய ஒரு புத்தகம்.
  ''பரிசுத்தம்'' எனும் சொல் இப்புத்தகத்தில் 80 முறைக்குமேல் வருகிறது.

  இப்புத்தகத்தில் கடவுள் தம்மை ஓர் அசாதாரணப் பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளார் —
  *''உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்''*
  லேவியராகமத்தில் 7 முறை (உ-ம்) லேவி 20:7,8

  இது யேகோவாவின் கூட்டு நாமங்களில் ஒன்று:
  ''யேகோவா-மெக்காடேஷ்'' (Jehovah-Makadesh)
  = *''உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர் நானே!''*

  இங்கு அழுத்தப்படுவது ***''நானே''*** என்பது!

  பைபிளின் தேவனுக்கும் பிற மார்க்கங்களுக்கும்
  **அடிப்படை** வேறுபாடு இதுதான் —

  அவர் பரிசுத்தர் மட்டுமல்ல; நம்மைப் பரிசுத்தமாக்குபவரும்!
  அல்லேலூயா!

  பரிசுத்தத்தைக் குறித்துப் படிக்கவேண்டிய முதல் பாடம் இதுவே.
  அதாவது, என்னால் முடியாது ...
  எனது பலத்தைச் சார்ந்திருக்க முடியாது ...
  நான் எனது பரிசுத்தத்திற்கு முதலும் முடிவுமாய்த்
  தேவனையே சார்ந்திருக்கவேண்டும்!

- எபிரெயரை எகிப்திலிருந்து தேவன் வெளிக்கொண்டுவந்ததின் பிரதான நோக்கம் இதுவே —
  லேவி 11:44,45 ... எத்தனை முறை *''பரிசுத்தம்!''*

கானான் என்பது பரலோகமல்ல;

அது **பூவுலகில்** வாழும் வெற்றியுள்ள, பரிசுத்த வாழ்வு —

1 பேது 1:15-17...*''பரிசுத்தராயிருங்கள்...இங்கு பரதேசிகளாய்''*

திரளான கிறிஸ்தவர்கள் எகிப்தை விட்டு வெளிவந்துவிட்டனர்,

ஆனால் அவர்கள் கானானில் நுழைவதில்லை;

வனாந்தரத்திலேயே மடிந்துவிடுகின்றனர்.

■ இச்சத்தியத்தைப் புரிந்துகொள்ளத் திருமறையை ஆராய்வோம்:
நாம் பரிசுத்தமாகுவது **தேவனாலேயே**, நமது பலத்தால் **அல்ல**

□ சங் 130:3,4,7,8 ... *நீர் அக்கிரமங்களைக் கவனித்தால் ...?*

— அவரது இரக்கம் நாடி அவர் முன் விழுதல்

எனவேதான் சங் 143:1,2 ... *என்னை நியாயந்தீர்க்காதேயும் ...*

*ஒருவனும் நீதிமானல்ல ...*

□ இதுவே யோபுவின் புலம்பல் —

யோபு 14:4 ... *அசுத்தமானதிலிருந்து சுத்தமானதை*

*யார் கொண்டுவர முடியும்?*

தேவனைத் தவிர ஒருவராலும் முடியாது!

□ எனவேதான் ஏசாயா கூறியது —

ஏசா 64:6 ... *அனைவரும் தீட்டு ... அழுக்கான கந்தை ...*

நம்மில் நல்லவை என நாம் நினைப்பவையும்

கடவுளுக்குமுன் குப்பைக்கூளம்!

''நமது அக்கிரமங்கள்'' ஒழிக்கப்படவேண்டியவைதான்;

ஆனால் ''நமது நீதி'' எனப்படுவது எதுக்குதவும்?

□ நமது அநீதி கடவுளுக்கு நஷ்டம் என்றும்,

நமது நீதியோ அவருக்கு லாபம் என்றும்

நினைக்குமளவிற்கு அகங்காரம் நமக்குண்டு —

எலிகூ: யோபு 35:6-8 ... *நீர் நீதிமானாயிருந்தால்*

*அதினால் ''அவருக்கு'' என்ன கிடைக்கும்?*

கடவுள் முழுமையில் முழுமையானவர் (absolutely absolute);
பூரணத்தில் பூரணமானவர் (perfectly perfect);
நிறைவில் நிறைவானவர் (completely complete).

நாம் அவரோடு எதையும் கூட்டவும் முடியாது;
அவரிடமுள்ள எதையும் குறைக்கவும் முடியாது!

இச்சத்தியத்தை நாம் மறக்கும்போதுதான்,
நமது சுய நீதியில் நாம் மூழ்கத் துவங்கிவிடுவோம்.

- ☐ தீர்க்கன் எரேமியா வலியுறுத்தும் சத்தியம் இதுவே —
  எரே 13:23 ... *எத்தியோப்பியன் ... சிவிங்கி*

  நம்மை நாமே மாற்றிக்கொள்ள
  நம்மிடம் எவ்விதத் திறனும் ஆற்றலும் இல்லை.

- ☐ திட மனது, தெளிந்த சிந்தை, நினைவாற்றல் போன்ற எதுவும் பரிசுத்தத்தை நமக்குக் கொண்டுவர முடியாது —
  ஏசா 35:8 ... *பரிசுத்தப் பெரும்பாதை ... பேதையர்கூட ...*

- ☐ அன்னாள் தனது பாடலில் இதைத் தீர்க்கமாய்ப் பதிவு செய்தாள் —
  1 சாமு 2:9 ... *அவர் காக்கிறார் ... பலத்தினால் ஒருவனும் மேற்கொள்வதில்லை*

- ■ புதிய ஏற்பாட்டு ஆக்கியோன்களும் இச்சத்தியத்தைச் சரிவரப் புரிந்து கொண்டு தங்கள் நிருபங்களில் இதை அடிக்கடி குறிப்பிட்டனர் —
  முக்கியமாகப் பவுல் அப்போஸ்தலன்:

- ☐ தனது இயலாமையை எண்ணிப் பவுல் புலம்பும்வரை
  அவனது வாழ்வில் ஒன்றும் நிகழ முடியவில்லை —

  ரோ 7:18 ... *என்னில் நன்மையேதுமில்லை ... பலமில்லை ...*
  :24 ... *என்னை யார் விடுதலையாக்குவார்?*

நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தும் பரிசுத்தம் கிட்டவில்லை—
8:3 ... *மாம்சத்தினால் பலவீனம் ...*

பிரமாணங்களைக் கைக்கொள்ள அவனுக்கு முடியவில்லை என்று பொருளல்ல —

*''குற்றம் சாட்டப்படாதவன்''* என்கிறானே! (பிலி 3:6-8)

குறிப்பு என்னவெனில்: *''கடவுளுக்குமுன் மனிதன் ...*
*பெருமைபாராட்டாதபடி ...''*

1 கொரி 1:29 ... *மனிதன் எவனும் ...*
:30,31 ... *கிறிஸ்துவே நமது நீதி, பரிசுத்தம்*

ஆம், ஒருபோதும் உங்கள் சொந்த பலத்தைச் சார்ந்திருக்கக்கூடாது!

■ பவுலின் நிருபங்களிலிருந்து இன்னும் சில வசனங்கள் —
ரோ 5:6 ... *நாம் ''பலவீனராயிருக்கையிலே''*
(*''பாவிகளாய்''* என்று மட்டுமல்ல — வச 8)

நமது சொந்த பலத்தால் எதையோ சாதிக்கிறோம்
என்று நினைக்கும்போதே *''கிருபையிலிருந்து விழுகிறோம்''* —

கலா 5:4 ... *கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து ...*

எவ்வளவு கொடூரமான காரியம்!
எனவேதான் பவுல் இவ்விதம் எச்சரிக்கிறான் —

1 கொரி 10:12 ... *நிற்பதாய் எண்ணுகிறவன் ... விழாதபடி ...*
சூழமைவு: *சோதனை* (வச 13)

■ பாடுபட்டுத்தான் பேதுரு இப்பாடத்தைக் கற்றுக்கொண்டான் —
மத் 26:33 ... *''நான் ஒருபோதும் இடறலடையேன்''*
ஏன் தோற்றான்? — சொந்த பலத்தைச் சார்ந்தான் (வச 41)
ஆனால் முடிவில், *''மகா மேன்மையான வாக்குகளுக்காய்த்''*
துதி பாடினான் —

2 பேது 1:3,4 ... *திவ்விய சுபாவத்தில் பங்கு*

■ இதை அப்போஸ்தலன் யாக்கோபு ஆமோதித்தான் —
யாக் 2:10 ... *ஒன்றில் தவறினால் ...*
எனவே *அவரது இரக்கத்தைப்* பற்றுங்கள் (வச 13)

- எபிரெயர் நிருப ஆக்கியோன் இச்சத்தியத்தை
  இன்னும் அழகாய்ச் சித்திரிக்கிறான் —

  எபி 4:15,16 ... *நமது பலவீனங்களுக்குப் பரிதபிப்பு ...*

  *ஆதலால் ... கிருபாசனம் ...*

- முடிவாக, யூதா 24இலிருந்து ஒரு வாக்கு —
  *உங்களை வழுவாதபடி காக்க அவர் வல்லவர் ...*

இப்படியெல்லாம் சொல்லும்போது ஒரு கேள்வி:

அப்படியானால் எனது பரிசுத்தத்திற்காய்
''நான்'' ஒன்றுமே செய்யவேண்டியதில்லையா?

பதில் அடுத்த அத்தியாயத்தில் ...

## 2. உங்கள் பொறுப்பை மறந்துவிடக்கூடாது.

Do not forget your responsibility.

- சத்தியம் இணை கோடுகள் போன்றது.
  அதற்கு இரு பக்கங்கள் உண்டு.
  விவிலியம் போதிக்கும் பரிசுத்தம் தேவனது ஏகாதிபத்தியம்,
  மனிதனது பொறுப்பு ஆகிய இரண்டிற்கும் இடையேயுள்ள சமநிலை.
  ஒன்றை விட்டுவிட்டு மற்றொன்றைப் பிடித்துக்கொள்வது கேடு.

- தேவனது ஏகாதிபத்தியம், மனிதனது பொறுப்பு ஆகிய
  ஒரே நாணயத்தின் இரு பக்கங்களைச் சமநிலைப்படுத்தும் பகுதிகள்
  திருமறையில் நிறையவுண்டு:

  - ☐ லேவியராகமத்திலுள்ள வசனத்தில் துவங்குவோம் —
    லேவி 20:7,8
    நம்மைப் பரிசுத்தமாக்குகிறவர் கர்த்தர்தான்; ஆனாலும்
    *''நான் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும்*
    *பரிசுத்தராய்* ***இருங்கள்''*** என்கிறார்!

  - ☐ தீர்க்கன் ஓசியா —
    ஓசி 10:12 ... *நீதிக்கென்று ''விதைப்பது:''* நமது செயல்
    *நீதியைப் ''பொழிவது:''* கடவுளது செயல்

  - ☐ இரட்சிப்பு ஓர் ''இலவச'' ஈவு
    எபே 2:8,9 ... அதைக் குறித்துப் பெருமையடிக்கக்கூடாது ...
    *அது கிரியைகளினால் அல்ல ...*
    ஆனால் —
    லூக் 13:23,24 ... *உள்ளே நுழையப் ''பிரயாசப்படுங்கள்''*

  - ☐ *விருப்பம் தருபவரும், செயலாற்ற உதவுபவரும்*
    *தேவனே* (பிலி 2:13)

  அதே வேளையில்,
  *நமது இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவேண்டும்* (வச 12)

☐ ''இயேசு'' *உலகை ஜெயித்துவிட்டதால்* நம்மை மகிழ்ந்திருக்கச் சொல்கிறார் — யோ 16:33 ... *திடன் கொள்ளுங்கள் ...*

இங்கு *''உலகம்''* என்பது எதைக் குறிக்கிறது?

1 யோ 2:15-17

*... உடலின் ஆசை*

*... கண்களின் இச்சை*

*... வாழ்வின் பெருமை*

இதன் பொருள், இந்த 3 சோதனைகளையும் அவரது உதவியால் நாம் மேற்கொள்ளவேண்டும்.

இதோ ஒரு நற்செய்தி —

என்றோ பெறவிருக்கும் வெற்றிக்காய் நாம் போராடுவதல்ல, ஏற்கனவே பெற்றுவிட்ட வெற்றியிலிருந்து நடைபோடுகிறோம்!

அல்லேலூயா!

முடிவில் இயேசுவுடன் *''வெற்றிச் சிங்காசனத்தில்''* அமருவோம்! (வெளி 3:21)

■ இந்த இருபக்கச் சத்தியத்தை விளக்கும் இன்னும் சில வேதப் பகுதிகளையும் கவனிப்போம் —

☐ கிறிஸ்துவின் வெற்றி நமக்குத்தான்.

இது அனுபவத்தில் சாத்தியமாவது எங்ஙனம்?

ரோ 6:11-14 ... (அ) *எண்ணு* (ஆ) *எதிர்த்திடு* (இ) *ஒப்புவி*

இதுவே பரிசுத்தமாகுதலின் **பாதை**

வச 22 ... *பலன் ... பரிசுத்தமாகுதல் ... நித்திய ஜீவன்*

பலன் (கனி): *''பரிசுத்தமாகுதல்''* — இதுவே கானான் (பூவுலகு)

முடிவு: *''நித்திய வாழ்வு''* — இது விண்ணகம்

கிறிஸ்துவோடு முழுமையாய் அடையாளப்படுத்துதல் —

*''கிறிஸ்துவோடு ... எழுந்து ... வீற்றிருந்து''* (எபே 2:4-7)

எனவே, *உங்கள் அழைப்புக்குப் பாத்திரராய் ...* (4:1)

■ **நிலை** (standing) (எங்கே வைக்கப்பட்டிருக்கிறோம்) vs.

**நடை** (state) (எப்படி நடந்துகொள்கிறோம்)

வைக்கப்பட்டுள்ள நிலை vs. நடந்துகொள்ளும் விதம்

அதாவது, நிலையின்படி பரிசுத்தம் vs. நடையின்படி பரிசுத்தம்

இதை விளக்கும் சில வேதப் பகுதிகள் —

☐ ஏற்கனவே *''பரிபூரணம்''* (கொலோ 2:10) — நிலை
*''தேறினவனாய்''* நிறுத்த ( '' 1:28) — நடை

☐ ஏற்கனவே *புதிய மனிதனைத் தரித்திருக்கிறோம்*
(கொலோ 3:9,10) — நிலை
*பழைமைவகளைக் களையவேண்டும்* (வச 5,8) — நடை

☐ ஏற்கனவே *பரிசுத்த ராஜரீக ஆசாரியக்கூட்டம்*
(1 பேது 2:9,10) — நிலை
எனவே *உடலின் இச்சைகளுக்கு விலகுங்கள்* (வச 11) — நடை

☐ அவ்வளவு ஊனியல்பிலிருந்த கொரிந்து விசுவாசிகள்கூட ...
1 கொரி 6:11 ... *கழுவப்பட்டீர்கள் ... பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்*
:12,13 ... *எனவே அடிமைகளாகாதீர்கள்*
நிலை: *பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்* (1 கொரி 1:2)
நடை: பல பாவங்களிலிருந்து மனந்திரும்பவேண்டும்.
அதாவது, தேவப் பிள்ளைகள் யாவரும் **பரிசுத்தவான்களே;**
அவர்கள் **பரிசுத்தவான்களாய்** நடந்துகொள்ளவேண்டும்.

☐ சிலாக்கியம்: *சர்வ வல்ல* ***தேவன்*** *நமது* ***தந்தை*** (2 கொரி 6:18)
பொறுப்பு: *''தேவபயத்தோடு'' பரிசுத்தத்தைப் பூரணப்படுத்தி*...(7:1)
தந்தைதானே என்று கவலையீனமாயிருக்கக்கூடாது!

☐ தேவனது வேலை: *கிருபையினால் இரட்சிப்பது* (தீத் 2:11)
நமது பங்கு: *அவபக்தி, இச்சையை வெறுத்து ...* (வச 12)
அப்பொழுதுதான் வருகையின்போது ஆயத்தமாயிருப்போம்(வச 13)

☐ *''தெய்வீக சுபாவத்திற்கான''* மகா மேன்மையான வாக்குகள்
நமது பொறுப்புக்கு மாற்றல்ல —

2 பேது 1:3,4 ... *மகா மேன்மையான வாக்குகள்*

:5-7 ... *கூட்டுங்கள்* + + + + + + +

*''திவ்ய சுபாவத்திற்காகவே ...''*

- ☐ நமது பங்கு: *விழித்திரு ... எழுந்திரு* ... எபே 5:14
  தேவனது செயல்: நம்மை *''எரிந்து பிரகாசிக்கச்''* செய்வார்.
  சூழமைவு: பரிசுத்தம் (வச 9) vs. இருள் (வச 11)

- ☐ நாம் ஒப்புவிக்கும் அளவுக்குத்தான் அவர் எடுத்துக்கொள்வார்.
  இதுவே பரிசுத்தமாகுதலின் பாதை —
  2 தீமோ 1:12ஆ ... *நான்* ***ஒப்புவித்ததைக் காத்துக்கொள்வார்.***

- ☐ முடிவான உச்சக்கட்டம்:
  1 யோ 3:2 ... *நாம் அவரைப்போல் இருப்போம்*
  :3 ... *இந்த நம்பிக்கையுள்ளவன் ... சுத்திகரிக்கிறான்* ...

இறுதி நாட்களில் சோதனைகள் பெருகும், பலக்கும்;
ஆனால், பொல்லாங்கன் நம்மைத் தொட முடியாது (1 யோ 5:18இ)
ஏனெனில், விசுவாசியானவன் *''தன்னைக் காக்கிறான்!''*

## ■ முடிவு வரிகள்

- ☐ ஒவ்வொருவரும் உண்மையாகவே விரும்புமளவு
  பரிசுத்தமாகலாம்! (A.W. டோசர்)
- ☐ கடவுள் மட்டுமே செய்யக்கூடியதைச் செய்ய முயலாதீர்;
  நீங்கள்தான் செய்யவேண்டியதைச் செய்யத் தவறாதீர்!
- ☐ தேவன் இல்லாது என்னால் ஒன்றும் செய்யமுடியாது;
  நான் இல்லாது அவர் ஒன்றும் செய்யமாட்டார்!

Without God, I cannot;
Without me, God will not!

## 3. பாவத்தையே நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது.
Do not become sin-conscious.

- தேவன் பிரதானமாக மன்னிப்பது "பாவியை;"
  அப்பொழுது அவனது "பாவங்களும்" மன்னிக்கப்பட்டுவிடுகின்றன.
  ஏன்? நாம் பாவம் செய்கிறதால் பாவிகளல்ல;
  பாவிகளாயிருப்பதாலேயே பாவம் செய்கிறோம்!

  பாவம் செய்தபோது ஆதாம் பாவியானான்;
  நாமோ ஆதாமின் சந்ததியாக பிறப்பாலேயே பாவிகள்தான் (ரோ 5:14)

  - ☐ ஆயக்காரனின் ஜெபம்
    *"தேவனே, பாவியாகிய* ***என்மேல்*** *கிருபையாயிரும்"* (லூக் 18:13)
  - ☐ *தேவன்* ***"உங்களைக்"*** *கிறிஸ்துவுக்குள் மன்னித்தார்* (எபே 4:32)
  - ☐ *கிறிஸ்து* ***"உங்களை"*** *மன்னித்தார்* (கொலோ 3:13)

- **நம்மை** மன்னிக்கும்போது கடவுள் செய்வது:
  நமது பாவங்களை நீக்குகிறார் ... *கிழக்கு ... மேற்கு* (சங் 103:12)
  நமது பாவங்களை எறிந்துவிடுகிறார்...*முதுகின்பின்* (ஏசா 38:17ஆ)
  நமது பாவங்களை அகற்றுகிறார் ... *மேகங்கள்போல்* (ஏசா 44:22)
  நமது பாவங்களை அமிழ்த்துகிறார் ... *கடலின் ஆழம்* (மீகா 7:19)
  அவரது *அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம்* (எபே 3:18)

  இத்தனை ஒப்புமைகள் போதிப்பது —
  *அவர் நமது பாவங்களை இனி "நினைப்பதில்லை!"* (எபி 8:12)
  அறிக்கையிட்டவை ... மன்னிக்கப்பட்டவை ... மறக்கப்பட்டவை!

- நாம் கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது,
  சுய நீதி எனும் நமது "பொத்தலாடைக்குப்" பதிலாக
  கிறிஸ்துவின் நீதி எனும் "பொன்னாடை" போர்த்தப்படுகிறது
  (ஏசா 61:10) *(மணமகன்-மணமகள்)*

திரும்பி வந்த இளைய குமாரனுக்குத் தந்தை செய்ததுபோல —
லூக் 15:21,22 ... *ஆடை ... மோதிரம் ... காலணி* (தந்தை-மகன்)
கடவுள் நம்மைக் ''கிறிஸ்து வழியாகவே'' பார்க்கிறார்.
கிறிஸ்து *நமக்கு நீதியாகிவிட்டார்!* (1 கொரி 1:31)
கொண்டாடுவோம்!

■ பிசாசோ நமது பாவங்களை நினைவுபடுத்தி நம்மைக் குற்றப்படுத்துவான் —
வெளி 12:10,11 ... *இரத்தம் ... சாட்சி ... மேற்கொண்டனர்*
*சாட்சி:* பாவங்களையெல்லாம் *''இரத்தம்''* மூடிற்று எனும் அறிக்கை!

பவுலின் சவால்: *குற்றம் சாட்டுகிறவன் யார்?*
ரோ 8:33,34 ... *கிறிஸ்துவே மரித்தவர்*
*''மட்டுமல்ல,'' பரிந்து பேசிக்கொண்டிருப்பவர்!*

☐ நீங்கள் பாவத்தில் விழ நேரிட்டாலும் —
1 யோ 2:1 ... *''**நீதிபரர்** இயேசு கிறிஸ்து பரிந்துரையாளர்''*
அவரது நீதி!

பிசாசு: பழிப்பவன் / இயேசு: பரிந்துரையாளர்
Accuser vs. Advocate
ஜெயிப்பது யார்?
எரே 50:34 ... *மீட்பர் ... வல்லவர் ... வழக்காடுவார்*
1 யோ 4:4 *உங்களிலிருப்பவர் உலகிலிருப்பவனிலும் பெரியவர்*

☐ வெள்ளம்போல் பாவச் சோதனைகள் வந்தாலும் —
சங் 93:3-5 ... *வெள்ளங்கள் ... அதிக வல்லவர் ... பரிசுத்தம்*

☐ பஞ்சாகமங்களிலும் இச்சத்தியம் தெளிவு —
எண் 23:21 *''யாக்கோபில் அக்கிரமம் இல்லை...ராஜாவின் சத்தம்''*
உங்கள் வெற்றியை முழங்குங்கள்!

☐ நீங்கள் **அடிக்கடி** விழுந்தாலும் —
நீதி 24:16அ ... *நீதிமான் ... ஏழு தரம் ... எழுந்திருப்பான்*

☐ நீங்கள் விழுந்தாலும், அழிந்துபோகமாட்டீர்கள் —
சங் 37:23,24 ... *காலடிகள் ... தள்ளுண்டுபோவதில்லை*

- ☐ உளையான சேற்றில் நீங்கள் அகப்பட்டுக்கொண்டாலும் —

  சங் 69:14 ... *நான் அழிந்துபோகாதபடி* ...

  (உ-ம்) பேதுரு (மத் 14:30)

- ■ இங்குதான் யூதாஸ் தவறிவிட்டான் —

  பேதுரு VS. யூதாஸ்

  பேதுரு பாவம் செய்தான், ஆனால் தனது பாவம்
  மன்னிக்கப்பட முடியாதது என்று அவன் கருதவில்லை.

  யூதாஸ் பாவம் செய்தான்:

  அவன் மனம் வருந்தினான் (மத் 27:3)
  அவன் அறிக்கை செய்தான் (வச 4)
  தனது பாவம் என்னவென்று குறிப்பிட்டான் (வச 4)
  பணத்தைத் திருப்பியும் கொடுத்துவிட்டான் (வச 3)

  ஆனாலும், தனது பாவம் மன்னிக்கப்பட முடியாத கொடுமை
  என்று எண்ணி, ஒதுங்கி ஓடிவிட்டான்!

பேதுரு பாவவுணர்வடைந்தான் (Conviction)
யூதாசோ குற்றவுணர்வடைந்தான் (Condemnation)
ஆவியானவர் உணர்த்துவார், குற்றம் சாட்டமாட்டார் (ரோ 8:1)

Max Lucado: உங்கள் பாவத்தைவிடக் கடவுளது கிருபை பழையது;
உங்கள் பாவத்தைவிடக் கடவுளது கிருபை பெரியது!

இப்படியில்லாவிடில்,

*''தேவனுக்கு முன் உண்மையாயிருந்தேன்''* என்று தாவீது
எப்படிச் சொல்ல முடிந்தது? 2 சாமு 22:24

அது 32ஆம், 51ஆம் சங்கீதங்களினாலேயே!

(உ-ம்) 32:1,2 ... *மீறுதல் ... மூடப்பட்டது ... கபடமில்லாது ...*
(இதைப் பரிசுத்த பவுல் ரோமர் 4:6-8இல் குறிப்பிடுகிறான்)

51:7 ... *பனியிலும் வெண்மை! (கபடமின்மை*, 32:2)

கிறிஸ்து தமது இரத்தத்தால் நம்மைக் கழுவுவது **முழுமையானது** —

*விசுவாசத்தினால்* ***நீதிமான் பிழைப்பான்*** (ரோ 1:17)

— என்பதின் பொருள் இதுவே!

- பரிசுத்தம் என்பது பரவசத்திற்கு எதிரானது என்று
  பிசாசு அநேக விசுவாசிகளை ஏமாற்றிவிட்டான்!

இப்படிச் சொல்லி, அவன் அவர்களைப் பாவச் சிந்தையிலேயே
அடிமைப்படுத்தியிருக்கிறான்.

இது தவறு.

உண்மையில், பரிசுத்தம்தான் பரவசம்!

Holy Life is Jolly Life!

எபி 1:9 ... *நீதி ... ஆனந்த தைலம்*

நெகே 8:10,11 ... *பரிசுத்த நாள் ... கர்த்தரில் மகிழ்ச்சி* ...

பரவச மனிதர் அனைவருமே பரிசுத்த மனிதர் அல்ல;
பரிசுத்த மனிதர் அனைவருமோ பரவச மனிதர்!

- பிசாசின் இன்னொரு பொய் —

நீ உன் பாவங்கள் ''அனைத்தையும்'' அறிக்கையிடவில்லை!

உண்மை: பாவங்கள் ''அனைத்தையும்'' அறிக்கையிட்டது
எவருமில்லை; நினைவுக்கு வந்ததை மட்டுமே
அறிக்கையிட்டுள்ளனர்.

பைபிள் கூறுவது: 1 யோ 1:9

''*நாம் நமது* (நமக்குத் தெரிந்த) *பாவங்களை அறிக்கையிட்டால் ...*
*அவர்* ***நம்மை*** *மன்னித்து ...* ***நம்மைச்*** *சுத்திகரிக்கிறார்*''

அடுத்த முறை பிசாசு உங்கள் கடந்த காலத்தை நினைவுபடுத்தினால்,
நீங்கள் அவனது எதிர்காலத்தை அவனுக்கு நினைப்பூட்டுங்கள்!

## 4. தோல்விகளுக்குச் சாக்குப்போக்குகள் சொல்லக்கூடாது.

Do not give excuses for failures.

- சாக்குப்போக்கு சொல்வதிலும், பிறர்மீது பழிசுமத்துவதிலும் மனிதன் பேர்பெற்றவன்.
  நமது முதல் பெற்றோரிடமிருந்து நாம் இதைக் கற்றுக்கொண்டோம்.

  ஆதாம் பழியை ஏவாள் மீதும்,
  ஏவாள் சர்ப்பத்தின்மீதும் சுமத்தவில்லையா? (ஆதி 3:11-13)

  சாக்குப்போக்கு சொல்லிக்கொண்டிருக்கும்வரை முன்னேறமுடியாது!

- பரிசுத்தத்தைக் குறித்த சில பொதுவான சாக்குப்போக்குகள் —

  ☐ ஒரு சிலரே ''பரிசுத்தவான்களாக'' அழைக்கப்பட்டிருக்கின்றனர்.
  ரோமன் கத்தோலிக்கர், புராட்டஸ்டன்ட் ஆகிய
  இரு பிரிவுகளிலும் ''பரிசுத்தவான்'' என்பது பிரத்யேகமாகச்
  சிலருக்கு வழங்கப்படும் ''பட்டம்'' ஆகிவிட்டது —

  இது பைபிள் போதனை **அல்ல:**
  ''எல்லா'' விசுவாசிகளும் ''பரிசுத்தராக'' அழைக்கப்பட்டுள்ளனர் —

  1 கொரி 1:2 ... கொரிந்துவிலுள்ள மாம்சீகச் சிந்தையுள்ள விசுவாசிகளும்கூட!
  எபே 1:1; 5:3 ... எபேசுவிலுள்ள எல்லா விசுவாசிகளும் ''பரிசுத்தவான்கள்'' என்றழைக்கப்பட்டனர்.
  பிலி 1:1 ... பிலிப்பியிலிருந்து எல்லா விசுவாசிகளும், ''கண்காணிகளும்!''
  (அதாவது, ''பிஷப்'' அல்லாதவர்களும் பரிசுத்தவான்களே!)

  ஒவ்வொரு விசுவாசியும் ''பூரணம்'' அடைவதே இறைச்சித்தம்
  கொலோ 1:28 ... *எந்த ... எந்த ... எந்த ... மனிதனையும்*

  முடிவான சத்தியம்:
  கிறிஸ்துவுக்குள் விசுவாசிகள் அனைவரும் ''பரிசுத்தவான்கள்;''
  பரிசுத்தவான்களாக அவர்கள் ''பரிசுத்தமாய்'' நடக்கவேண்டும்!

எனவே, ''பரிசுத்தவான்'' என்பது ஒரு சிலருக்கான ''பட்டம்'' அல்ல,
அது தேவ பிள்ளை ஒவ்வொருவருக்குமான ''அழைப்பு!''

அடுத்த சாக்குப்போக்கு —

☐ இது எனது ''சுபாவம்.''

ஆம், நம்மனைவருக்கும் பாவ சுபாவம் உண்டு;
ஆனால் குணங்கள் நபருக்கு நபர் வேறுபடும்.

(உ-ம்) சிலர் மென்மையாயிருப்பர்; மற்றவர் முற்கோபிகளாயிருப்பர்.

ஆனால், இக்குணங்களையெல்லாம் ஆவியானவரின்
ஆளுகைக்குள் கொண்டுவர பைபிள் நம்மையழைக்கிறது —

நீதி 16:32 ... *மனதை அடக்குகிறவன் ...*
25:28 ... *ஆவியை அடக்காதவன் ... மதிலிடிந்த நகர்*

இங்கு பொருள் என்னவெனில்,
நமது குணங்களைக் கட்டுப்படுத்துவது ''நமது'' பொறுப்பே.

எனவேதான் நாம் ஆவியானவரால் நிரப்பப்படுகிறோம் —
ரோ 8:12-14 ... *மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல ...*
*ஆவியினாலே அழித்து ...*

விரும்பத்தகாத நமது குணங்களைக் கட்டுப்படுத்த
ஆண்டவர் ஏராளம் ஏதுக்களைத் தந்துள்ளார்;
நாம் அவற்றைப் பயன்படுத்தவேண்டும்.
ஆவியின் கனிகளில் ஒன்று: *''தன்னடக்கம்''* (கலா 5:23)

நமது சுபாவத்தை மாற்றுவதற்கான *''திருவாக்குகளையும்''*
''சாத்தியக்கூறுகளையும்'' பைபிள் அடிக்கடி குறிப்பிடுகிறது —
எசேக் 36:26,27 ... *''கட்டளைகளில் நடக்கப்பண்ணுவேன்''*

அடுத்த சாக்குப்போக்கு —

☐ பொல்லாத இவ்வுலகில் பரிசுத்தம் சாத்தியமல்ல.
சில சூழல்களில் சமாளிக்கவே முடியாது!

சக 14:20,21 ... *கர்த்தருக்குப் பரிசுத்தம் ... பானைகள் ... மணிகள்*
அதாவது, நமது வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும்

- யோசேப்பு சோதனையை எப்படி வென்றான்? (ஆதி 39:9)
  பிர 7:26 ... *தேவனைப் பிரியப்படுத்துகிறவன் ... தப்புவான்*

- அனனியா, அசரியா, மிசாவேல் எவ்விதம் வென்றனர்?
  1 கொரி 10:13,14 ... *நேரிடும் சோதனை ... விக்கிரகாராதனை*
  (கொரிந்து நகர் விக்கிரகாராதனை நிறைந்தது.)

- சோதோமின் பாவத்திற்கு லோத்து எப்படித் தப்பினான்?
  2 பேது 2:8,9 ... தனது *மனச்சாட்சியின்படி* வாழ்ந்தான்;
  தேவனால் *விடுவிக்கப்பட்டான்!*

இவையெல்லாம் பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டுகள்தானோ?
இன்று நமது அழைப்பு என்ன?
பிலி 2:15 ... *பிழையற்றவர்கள் ... மாறுபாடுள்ள சந்ததி ...*
சர்தையிலும்கூட: வெளி 3:4 ... *கறைப்படுத்தாதவர்கள்*

இன்னொரு சாக்குப்போக்கு —

☐ திருமறையின் கதாபாத்திரங்கள் தவறவில்லையா?

ஆபிரகாம் பொய் சொல்லவில்லையா?
மோசே சட்டென்று கோபப்படவில்லையா?
தாவீது இச்சையில் விழவில்லையா?
அப்போஸ்தலர் சண்டையிட்டுக்கொள்ளவில்லையா?

இவையெல்லாம் நம்மை *''எச்சரிக்கவே''* — 1 கொரி 10:11

நல்ல எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போமே —

பன்னிருவரில் பதினொருவர் தேறவில்லையா? (யோ 17:12)
*''மேகம் போன்ற திரளான சாட்சிகள்''* (எபி 12:1)

■ சாக்குப்போக்குகளைக் கண்டுபிடித்துக்கொண்டிராது,
பரிசுத்தத்திற்கான வாஞ்சையை வளர்த்துக்கொள்வோம் —

*நீதியின்மேல் ... பசிதாகம் ... பாக்கியவான்கள்* (மத் 5:6)
அதுபோலவே, ஏசா 26:9 ... *வாஞ்சை ... நீதியைக் கற்றல்*

- ☐ ராபர்ட் முர்ரே மச்செயின் (1813-1843) என்றவொரு ஸ்காட்லாந்து பிரசங்கியாரின் ஜெபம்:

  ‘‘ஆண்டவரே, ஒரு மன்னிக்கப்பட்ட பாவி
  எவ்வளவு பரிசுத்தமாக முடியுமோ
  அவ்வளவு என்னைப் பரிசுத்தமாக்கும்!’’

- ■ 13ஆம் நூற்றாண்டு பேராயர் ஸ்டீபன் லாங்டனின் ஜெபப் பாடல்:

  *தேவா, தாழ்வான விருப்பங்களிலிருந்து எங்களைத் தூக்கும்,*
  *நெருப்பான பாவ இச்சைகளை அணையும்,*
  *ஆறாத காயங்களை ஆற்றும்;*
  *எங்கள் வணங்காக் கழுத்துக்களை வளையும்,*
  *உறைந்துபோன நிர்விசாரத்தை அகற்றும்,*
  *தாறுமாறாய் ஓடும் கால்களைப் பிடியும்,*
  *விண்ணகம் எங்கள் தாயகம் ஆகணுமே!*

## 5. செய்யத் தவறியவைகளைக் கவனியாதுவிடக்கூடாது.
Do not overlook the sins of omission.

■ பாவங்கள் (அ) செய்யத் தகாதவை (கொலை, விபச்சாரம், ...)
(ஆ) செய்யத் தவறியவை (விளக்கம்: யாக் 4:17)

(அ) செய்யத் தகாதவற்றைச் செய்தல்
(ஆ) செய்ய வேண்டியவற்றைச் செய்யாதிருத்தல்

செய்யத் தகாதவை என்பவற்றைப் ''பாவங்கள்'' என்கிறோம்;
செய்யத் தவறியவை என்பவற்றைத் ''தவறுகள்'' என்கிறோம்!
தேவனது பார்வையிலோ இரண்டும் சமமான பாவங்களே.

(உ-ம்) திருடுதல் ஒரு சமுதாயக் குற்றம்;
எளியோருக்குக் கொடாதிருப்பது அவ்வளவு தீயதாய்த் தெரிவதில்லை.

திருவசனமோ இரண்டையும் சேர்த்துப் பேசுகிறது —
எபே 4:28 ... *இனித் திருடாமல் ... குறைச்சலுள்ளவனுக்குக் கொடு*

அதுபோலவே, ''கெட்ட வார்த்தைகள்'' சமுதாயத்திற்கு எதிரானவை;
கேட்போருக்குப் பயனற்ற பிற வார்த்தைகளோ அவ்வளவு
மோசமாய்க் கருதப்படுவதில்லை.
திருவசனமோ — எபே 4:29... *கெட்ட வார்த்தை ... பக்திவிருத்தி ...*

■ செய்யத் தவறியவை எனும் பாவங்களின் சில —

□ தானதர்மத்தில் தவறுதல்

பரிசுத்தமும் தானதர்மமும்:
தானி 4:27 ... *நீதி செய்து ... சிறுமையானவனுக்கு இரங்கி ...*
லூக் 11:41 ... *விற்று ... பிச்சைகொடு ... சுத்தமாயிருக்கும்*
நெகே 8:10 ... *பரிசுத்த நாள் ... ஒன்றுமில்லாதோருக்குப் பங்கு*
ஏசா 1:16,17 ... *கழுவி ... நன்மை செய் ... திக்கற்ற பிள்ளைகள்*
:18 ... *பாவங்கள் கடுஞ்சிவப்பாயிருந்தாலும்*
58:7,8,10 ... *ஆகாரத்தைப் பகிர்ந்து ... நீதி ...*

— ஓர் இளம் அதிகாரியின் பிரச்னை:

மத் 19:16-22

செய்யத்தகாதவை எனும் பாவங்களை மேற்கொள்வது
அவனுக்கு எளிதாயிருந்தது ... (வச 18)

*''... செய்யாதே ... செய்யாதே ...''*

பொதுவாகச் சொல்லும்போது பிரச்னையில்லை: உன் அயலானை நேசி✓
குறிப்பாய்ச் சொல்லும்போதோ: ஏழைகளுக்காய் விற்றுக்கொடு✗

— நீதி வாழ்வும் தானதர்மச் செயல்களும் — மத் 25:37,40

அநீதிமான்களோ —
வச 42,43 ... *நீங்கள் செய்யவில்லை ... செய்யவில்லை ...*

தானதர்மத்தால் நீதி வாழ்வு பிரகாசிக்கப்படுகிறது —
2 கொரி 9:9,10 ...*ஏழைகளுக்குக் கொடுத்தான் ... நீதிப் பெருக்கம்*

*''சுத்தமான'' பக்தியின்* வரையறையே இதுதான் —
யாக் 1:27 ... *திக்கற்றவர் ... விதவைகள் ...*

தானதர்மத்தில் தயாளனாயிருந்த கொர்நேலியுவை
ஆண்டவர் *''சுத்தமாக்கப்பட்டவன்''* என்றார் — அப் 10:2,15; 11:9

பொதுவாக நாம் திருப்பணிக்குப் பத்திலொன்று எடுத்துவைப்பதுபோல்,
இன்னொரு பத்திலொன்றை எளியவர்க்காய் எடுத்துவைக்கலாம்.

அல்லது, கடவுளுக்காய் எடுத்துவைக்கும் தொகையில்
பாதியைத் திருப்பணிக்கும், பாதியை எளியவர்க்கும் கொடுக்கலாம்.

— லாசரு போன்ற பிச்சைக்காரர், வழியோரங்களில் வாழ்வோர்,
எளிய மாணவர், நாதியற்றோர் ... இவர்களுக்கு உதவுங்கள்.

நிவாரண உதவி என்றதும் நிறுவனங்களையே சார்ந்திருக்கக்கூடாது;
தனிப்பட்ட முறையில், குடும்பமாக உதவலாமே!

தானதர்மம் எப்பொழுதும் நற்செய்திப்பணியோடிணைய அவசியமில்லை;
மதமாற்றத்திற்குத் தானதர்மம் தூண்டில் புழுவா? கூடாது!

ஏழைக்கு உதவுவீர்; ஏனெனில் அவன் ஏழை;
அது ஒன்றே காரியம், காரணம்!
நமதாண்டவர் எளியோரின் தேவன்!

■ செய்யத் தவறியவை எனும் இன்னும் சில பாவங்கள் —

☐ நிறைவேற்றப்படாத பொருத்தனைகள்

உபா 23:21-23 ... *அது பாவம்*

திரும்பச் சொல்லப்பட்டுள்ளது — பிர 5:4,5

☐ நமது மனதை நிறைக்கவேண்டியவை பிலி 4:8

தீய சிந்தனைகளை அகற்றினால் போதாது,

தூய சிந்தனைகளை அப்பியாசிக்கவேண்டும்.

☐ மிஷனரிப் பணி குறித்த அசட்டை

— எண் 32:23... *காத்... ரூபன்... யோர்தான்...பாவம் கண்டுபிடிக்கும்!*

— நாம் ஈடுபடாதிருப்பதைத் தேவன் கவனிக்கிறார் (நெகே 3:5)

☐ பொதுவான *''நற்செயல்கள்''*

தீத் 2:14 ... *சுத்திகரி ... நற்கிரியை ...*

''நற்செயல்கள் என்றால் என்ன?

(அ) கடவுளை மகிமைப்படுத்தும் (ஆ) மக்களுக்குப் பயனளிக்கும்

இயேசு: *''மனிதர் உங்கள் நற்செயல்களைக் கண்டு ...*
*விண்தந்தையை மகிமைப்படுத்தட்டும்''* (மத் 5:16)

ஆங்கிலிக்கன் திருச்சபையின் *பொதுவான ஜெபப் புத்தகத்திலுள்ள* பாவ அறிக்கை:

''செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல்
செய்யத் தகாதவைகளைச் செய்துவந்தோம்!''

(பார்க்க: பக்கங்கள் 34-37, 423-425, 560-562, 571-610)

## 6. பிறரோடு ஒட்டாது ஒதுங்கி வாழக்கூடாது.
Do not practise seclusion.

- ''பரிசுத்தப்படுத்து'' (sanctify) என்ற சொல்லின் மூலப்பொருள் ''பிரித்துவை'' (set apart) அல்லது ''பிரிந்திரு'' (separate) என்பது.

  இதுவே தமது மக்களைக் குறித்த தேவ சித்தம் —

  பரிசுத்தம் பற்றிய புத்தகம் லேவியராகமத்திற்குத் திருப்புங்கள்—
  லேவி 20:26 ... *பரிசுத்தராயிருங்கள் ... மற்ற மக்களிடமிருந்து ...*

  கடவுள் தமது மக்களை உலகெங்கும் சிதறடித்தது அனைவருக்கும் ஆசீர்வாதமாயிருக்கவே — பிறவினத்தாரின் பாவ வழிகளைக் கற்க அல்ல. அவர்களோ இதில் தவறினர் ...
  மாறாக, அவபக்திச் செயல்களையே கற்றுக்கொண்டனர்.

  தமது மனிதர் மூலம் கடவுள் அவர்களைக் கடிந்துகொண்டார் —

  (உ-ம்) நெகேமியா
  13:26 ... சாலொமோனின் தவற்றைச் சுட்டிக்காட்டி
  :30அ ... *அஞ்ஞானச் செயல்களிலிருந்து சுத்திகரித்து ...*

  இச்சத்தியம் புதிய ஏற்பாட்டிலும் வலியுறுத்தப்படுகிறது —

  (உ-ம்) 2 கொரி 6:16-18 ... ***என்*** *மக்கள் ...* ***என்*** *குமாரர்... குமாரத்திகள்*

- இயேசுவின் காலத்தின் மார்க்க பக்தியுள்ள யூதரோ ''பிரிந்திருத்தல்'' (separation) என்ற பெயரில் ''ஒதுங்கியிருக்கத்'' (seclusion) துவங்கினர்

  இயேசு இதைக் கண்டித்துத் திருத்தினார் —
  மத் 9:9-13 ... மத்தேயுவின் இல்லம் ... *பாவிகளோடு விருந்து ...*
  *வைத்தியன் ... இரக்கம் ... பலியல்ல ...*

  இச்சத்தியத்தைத் தீர்க்கர்கள் பல முறை அறிவித்தனர் —
  ஏசா 1:11,17 / ஆமோஸ் 5:21-24 / மீகா 6:7,8 / ஓசி 6:6

  *பாவிகளுக்கு ''நண்பனாக''* மாறினால்தான்
  மக்களை ஆசீர்வதிக்க முடியுமென இயேசு அறிந்திருந்தார்!

(உ-ம்) *''உப்பு''* — உப்பை உணவின்மீது தூவாமல் பாட்டிலிலேயே
வைத்திருந்தால் என்ன பயன்?

(உ-ம்) *''விளக்கு''*— இருட்டு எங்கேயிருக்கிறதோ
அங்குதானே விளக்கேற்றப்படவேண்டும்?

நமது குடியுரிமை *''பரலோகில்''* இருக்கலாம் —
(பிலி 3:20)

ஆனால் இந்த *''உலகில்தான்''* நாம் *பிரகாசிக்கவேண்டும்* —
(பிலி 2:14ஆ,15)

தேவனானவர் விண்ணுலகில் அமர்ந்திருந்தாலும்,
அவரது பாதங்கள் மண்ணுலகில்தான் (ஏசா 66:1)

நாம் ''திருச்சபைக்கு'' *உப்பாய்* இருக்க அழைக்கப்பட**வில்லை!**
நாம் ''திருச்சபைக்கு'' *வெளிச்சமாய்* இருக்க அழைக்கப்பட**வில்லை!**

- ☐ *''அசுத்த'' உதடுகளுள்ளோர்* நடுவில் ஏசாயா வாழவில்லையா?
அங்குதானே ஆண்டவர் பரிசுத்தப்படுத்தினார்? (ஏசா 6:5-7)
- ☐ *''ஓயாப் பொய்யர், பெருவயிற்றுச் சோம்பேறிகள்''*
நடுவில் தீத்து அனுப்பப்படவில்லையா? (தீத் 1:12,5)

■ ''பிரிந்து வாழ்தல்'' குறித்த சில வேதப் பகுதிகளைக் கவனித்து
அவற்றின் சரியான பொருள் என்னவென்று பார்ப்போம் —

- ☐ சங் 1:1 ... *துன்மார்க்கரை* அல்ல,
அவர்களது *ஆலோசனையைத்தான்* ஏற்கக்கூடாது.

அப்படியே, *பாவிகளின் ''வழி'' ... பரியாசக்காரரின் ''இருப்பிடம்''*
6ஆம் வசனத்தில் யாவும் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளது —
*துன்மார்க்கரின் ''வழி''*

அதாவது, பாவிகளை அல்ல, பாவத்தையே வெறுக்கவேண்டும்;
தீயவரை அல்ல, தீயதையே வெறுக்கவேண்டும்!

- ☐ 1 கொரி 15:33 ... *ஆகாத சகவாசம் ... கெடுக்கும் ...*
இதன் பொருளென்ன?

அடுத்த வசனம்: *நீதிக்கேற்க "விழித்துக்கொள்ளுங்கள்."*
அதாவது, அவர்களால் மயக்கப்படாதீர்கள்.

இங்கு பேசப்படுவது துர்வுபதேசத்தையும் தவறான தத்துவத்தையும் பற்றியது —

வச 32 ... *கொடிய மிருகங்கள்போல்* வாழ்பவர்!
உயிர்த்தெழுதலை மறுப்பவர்.
இவ்விதத் தத்துவத்தை நாம் தழுவ முடியாது.

☐ யாக் 4:4 ... *"உலக" சிநேகம்*
சூழமைவு: இச்சை, பொருளாசை (வச 1-3)

உலகிலுள்ள மக்கள் அல்ல,
உலகிலுள்ள *பாவக் காரியங்கள்* — 1 யோ 2:15,16

■ இல்லையேல் நீங்கள் உலகைவிட்டே ஓடவேண்டியதிருக்குமே —
1 கொரி 5:9-11
சூழமைவு: சபையில் ஒழுங்கு ... *"உள்ளேயிருப்போர்"* (வச 12)

எனவேதான் இயேசு இவ்விதம் **குறிப்பாய்** ஜெபித்தார் —

யோ 17:15-18 ... *"உலகிலேயே அவர்களைப் பரிசுத்தமாக்கும்"*

இப்படித்தான் இயேசு வாழ்ந்தார் —
*பாவிகளின் நண்பன்* (மத் 11:19)
ஆனால் *பாவிகளுக்கு விலகினவர்* (எபி 7:26)
அதாவது, தம்மைக் *"கறைப்படாது"* காத்துக்கொண்டார்.

■ பிறரை ஐக்கியத்தில் கொண்டுவர நட்பு ஓர் ஆயத்தமாகும்:

— 1 கொரி 10:31-33 ... 3 குழுவினர்: *யூதர், கிரேக்கர், திருச்சபையினர்*
— அப் 2:47 ... *மக்களிடம் தயவு ... சபையில் சேர்க்கப்பட்டனர்*
— கொர்நேலியு தனது *நண்பரையெல்லாம்* அழைத்தான் (அப் 10:24)

■ நடைமுறையில் இச்சத்தியத்தைக் கடைப்பிடிக்கவேண்டிய சில குறிப்பான பகுதிகளைக் கவனிப்போம் —

☐ அவிசுவாசியான வாழ்க்கைத் துணை
1 கொரி 7:12-14 (எஸ்றா 9:1-3)
இன்னும் மணமாகாவிடில், விசுவாசியையே தேடுங்கள்.

☐ விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட பதார்த்தங்கள்
வாசியுங்கள்: 1 கொரி 8

சுருக்கம்:

— விக்கிரகம் ஒன்றுமில்லை; எனவே படைத்ததோ படைக்காததோ வித்தியாசம் ஒன்றுமில்லை (வச 4)

— இவ்வளவு திடமான உணர்வு எல்லாருக்கும் இருக்காது:

(அ) **உங்களுக்கு** இந்த அறிவு இல்லையேல்,
அதைச் சாப்பிடுவது பாவம்.

(ஆ) **பிறர்க்கு** இந்த அறிவு இல்லையேல்,
நீங்கள் அவர்களுக்கு இடையூறாயிருப்பது பாவம் (வச 8,9)

☐ உலகிலுள்ள பொதுவான நற்பண்புகள் —
உலகம் கறைபட்டதுதான்;
ஆனாலும் ஒவ்வொரு மனிதனிலும் ஓரளவாவது
இன்னும் *''தேவ சாயல்''* உண்டு (யாக் 3:9)

எனவே, உலகிலுள்ள நற்பண்புகளை மதித்திடக் கற்றிடுங்கள்.
கருப்புக் கண்ணாடி அணிந்தே உலகைப் பார்க்கக்கூடாது —
தீத் 1:15 ... *சுத்தமற்றவனுக்கு எதுவும் சுத்தமாயிராது!*

## ■ முடிவுரை

☐ பரிசுத்தமற்ற உலகிலிருந்து பரிசுத்தமற்ற ஒரு மனிதனைக்
கடவுள் எடுத்து, அவனைப் பரிசுத்தமாக்கி,
மறுபடி இந்தப் பரிசுத்தமற்ற உலகில் வைத்துப்,
பரிசுத்தமாய்க் காக்கிறாரே,
அதுதான் அற்புதங்களிலெல்லாம் அற்புதம்!

*— லியோனார்டு ரேவன்ஹில் (1907-1994)*

☐ இன்னொரு பழம் பரிசுத்தவானின் ஜெபம்:
''தேவா, இயேசு போல நான் மாறும்படி
எனது ஆன்மீகத்தை ஆழப்படுத்தும்;
அதே வேளையில் நான் இயல்பாகவும்
எப்பொழுதும் நடைமுறைக்கேதுவாகவுமே இருக்கட்டும்!''

## 7. சகவுறவுகளின் முக்கியத்துவத்தைக் குறைக்கக்கூடாது.

Do not belittle relationships.

- பரிசுத்தம்: இரு பக்கங்கள் — தேவனது பங்கு, மனிதனது பங்கு
அதாவது, தேவனது ஏகாதிபத்தியம் vs. மனிதனது பொறுப்பு

  மனிதனது பொறுப்பு என்பதில் சகவுறவுகளைச் சுமூகமாய் வைத்துக்கொள்வது முக்கியமான காரியம்.

- பரிசுத்தத்தை இப்படி வரையறுக்கலாம் —
  ரோ 14:18 ... *''தேவனுக்குப் பிரியம்''*
  *''மனிதருக்கு அங்கீகாரம்''*

  எனவே, நாம் இதை *''நாட''* வேண்டும் (வச 19) —
  ஏனோதானோ என்றிருக்க முடியாது.

  இன்னொரு முக்கிய வசனம்:
  எபி 12:14 ... *''சமாதானம் ... பரிசுத்தம்''*
  எனவே, *கசப்பான* எதையும் *கவனமாய்ப்*
  பிடுங்கியெறியவேண்டும் (வச 15)

- இயேசு மலைப்பிரசங்கத்தில் ''நீதியாய் வாழ்வதைக்'' குறித்து எவ்வளவோ உபதேசித்தார்;
அதற்கும் கூடுதலாகச் ''சகவுறவுகளைப்'' பற்றிப் போதித்தார்
  — கோபித்தலைப் பற்றிப் பேசினார் (மத் 5:22)
  — உண்மை பேசுதலைப் பற்றிப் பேசினார் (மத் 5:37)
  — எதிர்க்க வேண்டாம் ... கன்னம் (மத் 5:39)
  — எதிராளிகளைச் சிநேகித்தல் (மத் 5:44)
  — மன்னிப்பு (மத் 6:14,15)
  — பிறரை நியாயந்தீர்க்கக்கூடாது (மத் 7:1)
  — பிறர் செய்ய விரும்புவதையே நாமும் செய்தல் (மத் 7:12)

நேரமெடுத்து மலைப்பிரசங்கத்தைத் தியானியுங்கள் —
இதுவே கடவுளது *''பரிசுத்த பெரும்பாதை''* (Highway of Holiness)

■ ''சகவுறவுகளைப்'' ''பரிசுத்தத்தோடு'' இணைக்கும்
இன்னும் சில திருவசனங்களையும் பார்ப்போம் —

☐ சங் 15:1 ... *யார் ...* ***பரிசுத்த*** *பர்வதத்தில் தங்குவான்?*
:3 ... *புறங்கூறுதல் ... தீங்கு ... நிந்தையான பேச்சு*
:4 ... வாக்கு தவறாமை
:5 ... பிறரோடு பணக்காரியங்கள்

☐ யாக் 3:17,18 ... ***''சுத்தமான*** *ஞானம் ...* ***நீதியின்*** *கனி''*
*சமாதானம் ... சாந்தம் ... இணக்கம் ... இரக்கம் ... பாரபட்சமின்மை*
*... மாய்மாலமின்மை ...* (மறுபடி) *சமாதானம்*
*''சமாதானத்தில் விதைக்கப்படும்!''* (வச 18)
அதாவது, விதை: சமாதானம்
கனி: நீதி நிறை வாழ்வு

☐ அவ்விதமே, அப்போஸ்தலன் பேதுரு —
1 பேது 1:22 ... *ஆத்துமாக்கள் ... இதயங்கள் ...*
*சுத்திகரிப்பு...''உருக்கமான அன்பினால்''*
பின்னிப் பிணைந்த உறவு!

☐ அவ்விதமே, அப்போஸ்தலன் யோவான் —
1 யோ 3:10 ... தேவனின் பிள்ளைகள் — நீதி
பிசாசின் பிள்ளைகள் — அன்பில்லாமை

எவ்வளவு கண்டிப்பான வார்த்தைகள்!
இது ஒரு புதிய செய்தியல்ல (வச 11)

☐ பரிசுத்தமாகுதலுக்குப் பாவ அறிக்கை அடிப்படையானது;
நாம் பிறரை மன்னியாவிடில் நமக்கு மன்னிப்பில்லை.

☐ பரிசுத்தம் —
எதிர்மறைப் பக்கம்: *மாம்சத்தின் கிரியைகளைக்* களையுங்கள்
நேர்மறைப் பக்கம்: *ஆவியின் கனியை* விளைவியுங்கள்

மாம்சத்தின் கிரியைகள்: கலா 5:19-21 ... 17இல் 9 (சகவுறவுகள்)
ஆவியின் கனி: கலா 5:22-23 ... 9இல் குறைந்தது 7 (சகவுறவுகள்)

- நேர்த்தியான சில எடுத்துக்காட்டுகள் —

  தானியேல்: தானி 6:22 (தரியு மன்னனிடம்)
  ... *தேவனுக்குமுன் ... உமக்குமுன் ...*
  இயேசு: லூக் 2:52ஆ ... *தேவ கிருபை ... மனிதர் தயவு*
  (தந்தையானவர் அவரில் அகமகிழ்ந்தார்;
  மக்கள் அவரால் அருள் பெற்றனர்.)
  அப்போஸ்தலர்: 2 கொரி 8:21
  *... கர்த்தருடைய பார்வை ... மனிதனின் பார்வை ...*

- நமது பாவங்கள் கிறிஸ்துவின் திருவுடலின் பிற உறுப்புகளைப் பாதிக்கின்றன —

  சங் 69:5,6 ... *''என்னால் ... என்னால் ...''*

  தேவனுக்கு முன்பும் மனிதருக்கு முன்பும் நான்
  நடந்துகொள்வது ஒன்றையொன்று பாதிக்கும்!

  எனவேதான், நீதி 16:7 ... *ஒரு மனிதனின் வழிகள் கர்த்தருக்குப் ...*

- உங்களைத் திருத்துகிறவர்களை ஒதுக்கிவிடாதீர்கள் —

  ஏரோதைப்போல் இருங்கள், ஏரோதியாளைப்போல் அல்ல!
  மாற் 6:18-20 ... *''அவனை விருப்பத்தோடு கேட்டான்''*

இன்னொரு பாடம் —

- எவனையும் அவனது பாவத்திற்காய் அவதூறு பண்ணக்கூடாது — (உ-ம்) யோசேப்பு & மரியாள் (மத் 1:19) ... *''நீதிமானாயிருந்து ...''*
- சபையிலும் சமுதாயத்திலும் உள்ளவரோடு மட்டுமல்ல, **குடும்ப** அங்கத்தினரோடும் உறவுகள் சரிசெய்யப்படவேண்டும் —

  - ☐ பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே

    லூக் 1:16 ... *இருதயங்களைக் கர்த்தரிடம் ...*
    :17 ... *பிதாக்களைப் பிள்ளைகளிடம் ...*

  எனவேதான், இல்லந்தோறும் *''சமாதானம்''* கூறுங்கள் (லூக் 10:5)

சச்சரவும் கசப்பும் இல்லாத சமாதானமான சூழல்
பரிசுத்தமாய் நடப்பதற்கு அனுகூலம்.

☐ வாழ்க்கைத் துணைகளுக்கிடையே

1 கொரி 7:14 ... *''அவிசுவாசியான'' மனைவியும்*
*பரிசுத்தமாகிறாள்!*

1 பேது 3:7 ... *''நித்திய ஜீவனாகிய கிருபை ...''*
*ஜெபங்கள் தடைபடாதபடி ...*

:12 ... *நீதிமான்கள் ... வேண்டுதல்கள் ...*

■ *''**பரிசுத்த** முத்தத்தோடே ஒருவரையொருவர் வாழ்த்துங்கள்''*

புதிய ஏற்பாட்டு நிருபங்களில் 5 முறை!

ஆம், பரிசுத்தமும் சகவுறவுகளும் பிரிக்க முடியாதவை.

(பார்க்க: பக்கங்கள் 38-39, 98-100, 198-201, 751-754)

## 8. பக்தி முயற்சிகளைத் தளர்த்தக்கூடாது.

Do not slacken devotional disciplines.

■ நம்மைப் பரிசுத்தப்படுத்துவது **தேவனே** என்று குறிப்பிட்டோம்; அதனால் நமக்கு இதில் பங்கேதுமில்லை என்று பொருளல்ல.

நமது பரிசுத்த நடக்கையை வலுப்படுத்தும் ஆன்மீகப் பயிற்சிகளில் கிரமமாயிருப்பது நமது பிரதான கடமை.

அவற்றில் நான்கினைக் கவனிப்போம் —

**(அ) கிரமமான திருமறைத் தியானம்**

☐ நம்மைப் பரிசுத்தப்படுத்துவது பிரதானமாகத் திருவசனமே —

யோ 15:3 ... *இப்பொழுதே சுத்தம்* — துவக்க வேலை

17:17 ... *"பரிசுத்தமாக்கும்"* — தொடரும் சுத்திகரிப்பு

திருமறையின் முடிவான நோக்கம் —

2 தீமோ 3:16,17 ... நால்வகைப் பயன்

*உபதேசம் + கடிந்துகொள்ளுதல் + சீர்திருத்தம்* ▸▸ *நீதி*

சோதனை எவ்வளவு **பலமாய்** இருந்தாலும் ...

சங் 119:9 ... ***வாலிபன்*** *தன் வழியை ... உமது வசனம் ...*

மனனம் செய்தல்: வச 11 ... *பாவம் செய்யாதபடி இருதயத்தில் வசனம்*

☐ தமது வாலிபத்திலிருந்தே இயேசுவின் பழக்கம் இதுவே —

எனவேதான் ... *"எழுதியிருக்கிறதே ...*

*என்றும் எழுதியிருக்கிறதே ..."* (மத் 4:4-10)

*"வேதம் அவன் இதயத்தில் ... நடை பிசகுவதில்லை"*

சங் 37:31 (தினசரிக் காலைத் தியானம்)

திருவசனத்தைப் படிக்கப் படிக்க, தேவனுக்குப் பிரியமான நடக்கைக்கு ஏதுவாக அவரை அறிகிற அறிவில் வளருவோம் (கொலோ 1:10)

## (ஆ) விழிப்பு ஜெபம்

☐ வழக்கறிஞராயிருந்த E.M. பவுண்ட்ஸ் ஒரு ஜெப வீரன். ஜெபத்தைப் பற்றிய அவரது புத்தகங்கள் தனிப்புகழ் வாய்ந்தவை—

மேற்கோள்:

''பரிசுத்தம், ஜெபம் ஆகிய இரண்டையும் பார்த்தால் ஒன்றில்லாமல் ஒன்றில்லை!''

எனவேதான் இயேசு ஜெபத்தையும் சோதனையையும் இணைத்தார்—
மத் 26:41 ... *விழித்திருந்து ஜெபியுங்கள் ... சோதனை ...*

சீடர்களின் நல்ல விருப்பங்கள் போதவில்லையே!

*''உற்சாக ஆவிக்கும் பலவீன உடலுக்கும்''* இடையே போராட்டம்!

☐ எபே 6இலுள்ள *''சர்வ ஆயுத வர்க்கம்''* என்பது
*''**நீதியின்** ஆயுதங்கள்''* ஆகும் (2 கொரி 6:7)

ஜெபமே எல்லா ஆயுதங்களையும் கூர்மையாக்குகிறது —
எபே 6:18...(13-17க்குப்பின்) ... *எப்பொழுதும் ஜெபம் ...*

பரிசுத்தமாய் நடக்க அப்போஸ்தலருக்கே விசுவாசிகளின் ஜெபம் தேவைப்பட்டது —
எபி 13:18 ... *நல்மனச்சாட்சி ... எங்களுக்காக வேண்டுதல்*
எவ்வளவு பயபக்தியான கருத்து!

☐ *இடைவிடாது ஜெபியுங்கள் ... தேவன்தாமே பரிசுத்தமாக்குவார் ...*
1 தெச 5:17,23

## (இ) இடையறாத ஐக்கியம்

☐ எபி 3:13 ... *தினமும் புத்தி சொல்லுங்கள் ... பாவத்தின் வஞ்சனை ...*
இல்லையேல் *''கடினப்பட்டுவிடுவோம்''* (3:7,8/3:15/4:7)

அப்படியே, எபி 10:24-26 ... *சபை கூடுகிறதை சிலர் விட்டு ...*
*... மனப்பூர்வமாய்ப் பாவம் ...*

☐ கர்த்தருடைய ஜெபம்

*"**எங்களை** மன்னியும் ... **எங்களை** விடுவியும் ..."*

கூட்டுச் சுத்திகரிப்பு —

எபே 5:25-27 ... *கறைதிரையற்ற ... பரிசுத்தம் ... பிழையின்மை ...*

1 பேது 2:5 ... *பரிசுத்த "ஆசாரியத்துவம்"* = ஆசாரியர் கூட்டம்
... *ஆவிக்குரிய மாளிகை* = *ஒரு குடும்பம்*
:9 ... *பரிசுத்த "மக்களினம்"*

☐ ஏதோ சில சமயங்களில் விழுவது சாதாரணம்தான் —
பிர 4:10 ... *ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ!*
தவறாது ஐக்கியப்பட்டுக்கொள்ள
ஒரு சில நண்பரைச் சேர்த்துக்கொள்ளுங்கள்.

**(ஈ) அவ்வப்போது தற்பரிசோதனை**

☐ இது பாதங்கழுவுதலில் சித்தரிக்கப்பட்டுள்ளது —
யோ 13:8-10
ஏற்கனவே *குளித்தவன் ... கால்கள் மட்டும் கழுவவேண்டும்*—
இப்போது, நடக்கும்போது படிந்த தூசிக்காக!

☐ தாவீதின் சிறப்பானதொரு ஜெபம் —
சங் 139:23,24 ... *ஆராயும் ... சோதியும் ... அறியும் ...*

பாவப் பட்டியல்களைப் பயன்படுத்துங்கள்:
நீதி 6:16-19 ... 7 பாவங்கள்
மாற் 7:21-23 ... 13 பாவங்கள்
ரோ 1:29-32 ... 22 பாவங்கள்
கலா 5:19-21 ... 17 பாவங்கள்
2 தீமோ 3:2-5 ... 18 பாவங்கள்

☐ குறிப்பாய் அறிக்கையிடுங்கள்! பொதுவாய் ஜெபித்துவிடாதீர்கள்! சில்லறையாய்ப் பாவம்செய்து, மொத்தமாய் அறிக்கையிடுகிறோம்! தற்பரிசோதனைக் கேள்வித்தாள்களைப் பயன்படுத்துங்கள்.

தோல்விகளை நன்கு அலசிப் பாருங்கள் —
எதனால் தோல்வியுற்றேன்?
எங்கே தோல்வியுற்றேன்?
எப்பொழுது தோல்வியுற்றேன்?
எப்படித் தோல்வியுற்றேன்?

தோல்விகளிலிருந்து எவ்வளவோ கற்றுக்கொள்கிறோம் —
வெற்றிகளைவிடத் தோல்விகளிலிருந்தே!

கடும் தற்பரிசோதனைக்கு நம்மைத் தூண்டுவது அவரது **அன்பே** —
சங் 26:2,3 ... *என்னைச் சோதியும் ... உமது கிருபை ...*

திரு இரத்தத்தால் உடனடிக் கழுவுதலை விசுவாசியுங்கள் (1 யோ 1:7-9)

படியுங்கள்: *எப்படி மனந்திரும்பக்கூடாது?* (பக்கங்கள் 13-44)

- William Longstaff (1822-1894) என்பவரது பாடல்:

Take time to be holy!

*தூய்மை பெற நாடு;*
*கர்த்தர் பாதமே;*
*நிலைத்தவர் வார்த்தை*
*உட்கொள்ளென்றுமே;*
*கூடி பக்தரோடு*
*சோர்ந்தோர் தாங்குவாய்;*
*யாவிலும் தெய்வ*
*தயை நாடுவாய்!*

(பார்க்க: பக்கங்கள் 68-70, 385-388, 651-656, 691-695, 735-737)

---

---

---

## ૯. வெற்றிகளால் குருடாகிவிடக்கூடாது.

Do not be blinded by success.

■ ஒருவன் வாழ்விலும், குடும்பத்திலும், வேலையிலும் ஆசீர்வாதம் பெற்றிருந்தால் கடவுள் அவனில் பிரியமாயிருக்கிறாரென்பது பரவலான கருத்து.

ஆனால், லவுகீக ஆசீர்வாதமோ ஆன்மீக ஆசீர்வாதமோ அப்படிக் கிட்டுகிறது என்பது திருமறையின் போதனையல்ல —

☐ பிர 7:15 ... *நீதிமான் .... துன்மார்க்கன்*
8:14 ... *நீதிமான் .... துன்மார்க்கன்*

இவையெல்லாம் ''இன்று'' கிடைக்கும் ஆசீர்வாதங்கள்;
''முடிவான'' ஆசீர்வாதமோ நீதிமானுக்குத்தான் (8:12,13)

நாமோ உடனடியான, வெளிப்படையான, ஆசீர்வாதங்களின் அடிப்படையிலேயே முடிவுக்கு வந்துவிடுகிறோம்.

காரணம், கடவுள் உடனே தண்டிப்பதில்லை (8:11)

கடவுளின் ஆசீர்வாதங்கள் ''நமது'' நற்குணத்தினால் அல்ல,
''அவரது'' சற்குணத்தினாலேயே! — கிருபை, இரக்கம்

☐ கடவுளது தண்டனைகள் உடனே வருவதில்லை;
அத்துடன், தகுந்தபடியல்ல, குறைவாகவே தண்டிக்கிறார் —
சங் 103:10 ... *நமது பாவங்களுக்குத்தக்கதாக செய்யாமலும்*
எஸ்றா இதை அறிக்கையிட்டான் —
எஸ்றா 9:13 ... *அக்கிரமத்திற்கு ஈடாய்த் தண்டியாமல் ...*

☐ நமது வாழ்வின் வெற்றிகள் ''நமது'' நீதியினால் அல்ல,
''நமது எதிரிகளின்'' அக்கிரமத்தினாலேயே.
உபா 9:4,5 ... *இல்லை ... ஆனால் ... இல்லை ... ஆனால் ...*

☐ கொரிந்திய விசுவாசிகளிடம் எத்தனையோ ஆன்மீக வரங்கள் இருந்தும், மாம்சீகம் நிறைந்திருந்தது —

1 கொரி 1:7 ... *யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய்*

(இரண்டாம் வருகைக்கு ஆவலோடு காத்திருந்தனர்)

ஆனாலும் 3:3 ... *இன்னும் மாம்சீகம்*

■ இச்சத்தியத்தைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ளாவிடில், பரிசுத்தமாய் வாழ உந்தப்படமாட்டோம் —

ஓசி 4:7அ ... *பெருகினார்கள் ... பாவம் செய்தார்கள்*

இந்த அபாயத்தைக் குறித்துப் பவுல் நம்மை எச்சரிக்கிறான் —

ரோ 6:1,2 ... *கிருபை ... பாவத்தில் நிலைத்திருக்கலாமா?*

ஒப்பிடுக 5:20ஆ

■ ஆன்மீகப் பக்தி முயற்சிகளில் தவறாதிருந்தும் தேவனைப் பிரியப்படுத்தாது வாழுவது சாத்தியம்—

1 கொரி 10:1-5 ... *ஞானஸ்நானம் ... ஞானாகாரம் ...*

*ஆனாலும் அதிகமானோரிடம் ...*

இது வெறுமனே வரலாற்றுக் குறிப்பு அல்ல, நமக்கு நேரிடையான எச்சரிப்பு (வச 6,11)

■ பாவத்தை மறைக்க ஊழியத்தைக் கூட்டுவது சகஜம் —

☐ சவுலரசன்

1 சாமு 15:22,23 ... *பலியைவிடக் கீழ்ப்படிதலே உத்தமம்*

☐ யூதா மக்கள்

எரே 7:3-5 ... *வழிகளைச் சீராக்குங்கள் .... ஆலயம் ... ஆலயம்*

☐ அதே வேளையில், எல்லாவற்றையும் நிறுத்திவிட்டுத் தூங்கி விடாதீர்கள்; பாவச் சேற்றில் இன்னுமதிகம் மூழ்கிப்போவீர்கள்!

ஊழியத்தைத் **தொடரவேண்டுமென்ற** உண்மையான பாரத்துடன் பாவத்தை விட்டொழியுங்கள் —

(உ-ம்) தாவீது ராஜா (ஈராண்டுகள் இழந்தான்)

சங் 51:12,13 ... *திரும்ப சந்தோஷம் ... உபதேசிப்பேன்*

நம்மை உற்சாகப்படுத்தும் ஒரு சத்தியம் —

*''கனி கொடுக்கும் கொடி ... இன்னும் அதிகம் ... சுத்தம்பண்ணுகிறார்''* (யோ 15:2ஆ)

''பரிபூரணமடைதல்'' எனும் உபதேசக் கண்ணியில் விழுந்துவிடாதீர்கள்.

ஆண்டவர் தேடுவது ''பரிபூரணமான'' பாத்திரங்களை அல்ல, *''கழுவப்பட்ட''* பாத்திரங்களையே (2 தீமோ 2:21)

■ முடிவாக ஓர் எச்சரிப்பு:

தேவன் தமது வரங்களை உடனே நம்மைவிட்டு எடுக்காதிருப்பதாலும், உடனே தண்டியாதிருப்பதாலும், சிறிது வழிவிலகல் ஏற்படும்போதே விழித்துக்கொள்ளவேண்டும்—

சங் 19:11-13 ... *''பிழைகள் ⏩ குற்றங்கள் ⏩ பாவங்கள் ⏩ பெரும்பாதகம்*

இங்குதான் சிம்சோன் தொலைந்தான்:

முதலாவது ஒரு வேசியிடம் சென்றான் (நியா 16:1)

பின்பு தெலீலாளிடம் சிநேகம் கொண்டான் (வச 4)

பெலிஸ்தியர் அவன் மீது வந்தபோது **மூன்று** முறை அவர்களை மேற்கொண்டுவிட்டான் (வச 6-15)

இந்தக் காலக்கட்டத்தில் அவன் விழித்திருக்கவேண்டும்!

*''விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்துகொள்கிறான்; பேதைகளோ நெடுகப் போய்த் தண்டிக்கப்படுகிறார்கள்''* (நீதி 27:12)

முடிவாக சிம்சோன் தனது ''அபிஷேகத்தை'' அலட்சியப்படுத்தினான்—*''தேவனுக்குமுன் நசரேயன்''* (நியா 16:17)

கர்த்தர் தன்னைவிட்டு விலகியதை அவன் *அறியவில்லை* (வச 20)

அதற்குப் பின்னரும் அவர் அவனது ஜெபம் கேட்டு 3000 பேரைக் கொன்றுவிடப் பலப்படுத்தினார் (வச 27-30)

அவனது 20-ஆண்டு ஆட்சியோ சோகமாய் முடிந்தது!

■ இன்னும் சில சிந்தனைக் குறிப்புகள் —

- ☐ ஆவியானவர்: *துக்கப்படுகிறார் … அவிக்கப்படுகிறார் … விலகுவதில்லை* (சங் 51)
- ☐ *சிறு நரிகள்* (உன் 2:15); *சொற்ப மதியீனம்* (பிர 10:1)
- ☐ *தேவனது வரங்களும் அழைப்பும் மாறாதவை* (ரோ 11:29)
- ☐ விளைவுகள் அல்ல, *மனச்சாட்சி* (ரோ 13:5) (சீக்கிரம் கட்டுப்படுத்திவிடுங்கள்)

ஆம், ஆசீர்வாதங்களினால் குருடாகிவிடாதீர்!

## 10. பரிசுத்தத்தில் வளருவதை நிறுத்தக்கூடாது.

Do not stop growing in holiness.

- திருமறையின் அழைப்பு:
  2 கொரி 7:1 ... *பரிசுத்தமாகுதலைப் ''பூரணப்படுத்துவோம்''*
  வெளி 22:11,12 ... *பரிசுத்தமாயிருக்கிறவன் ''இன்னும்'' பரிசுத்தம்*

வளருவதை நிறுத்தும்போது,
நாம் பின்வாங்கத் துவங்குவோம் —
இது மலையேறுவதைப் போன்றது!

- விவிலியத்தின்படி ''பரிசுத்தமாகுதல்'' மூன்று நிலைகளில் அனுபவமாகிறது —

(அ) நிலையின்படியாய்ப் பரிசுத்தமாகுதல் (Positional Sanctification)

இது மறுபிறப்பின்போது நடக்கும் **திடீர்** மாற்றம்.
1 கொரி 6:11 ... *கழுவப்பட்டீர்கள் ... பரிசுத்தம் ... நீதிமான்*
நாம் ''பரிசுத்தவான்கள்'' என அறிவிக்கப்பட்டுவிடுகிறோம்.
நாம் கிறிஸ்துவுக்குள் பூரணராகிறோம்.

(ஆ) நெடுகவே பரிசுத்தமாகுதல் (Progressive Sanctification)

இது மறுபிறப்பில் துவங்கும் **வளர்ச்சி**.
இது கிறிஸ்தவ வாழ்வின் காலமெல்லாம் நடப்பது.

(இ) பூரணமாய்ப் பரிசுத்தமாகுதல் (Perfect Sanctification)

இது கிறிஸ்துவின் வருகையில் நடக்கும் **திடீர்** மாற்றம்.
பிலி 1:5 ... *நற்செயலைத் தொடங்கினவர் ... முடிப்பார் ...*

(அ) நிலையின்படி பரிசுத்தமாகுதலில்,
நாம் பாவத்தின் ''தண்டனையிலிருந்து'' விடுதலை பெற்றோம்.

(ஆ) நெடுகவே பரிசுத்தமாகுதலில்,
நாம் பாவத்தின் ''வல்லமையிலிருந்து'' விடுதலை பெறுகிறோம்.

(இ) பூரணமாய்ப் பரிசுத்தமாகுதலில்,
நாம் பாவத்தின் ''பிரசன்னத்திலிருந்தே'' விடுதலை பெறுவோம்.

துவக்கம் — தொடர்ச்சி — முடிவு
(தேவனால்) (தேவனும் நாமும்) (தேவனால்)

■ நெடுகவே பரிசுத்தமாகிக்கொண்டிருக்கும் இக்காலக்கட்டத்தில், நமது பொறுப்பு அதிகம் —

☐ எந்த வயதிலும் விழிப்பாயிருங்கள் —

1 யோ 2:15,16 ... மூவகைப் பாவம்

இந்த வசனப்பகுதிக்கு முகவுரை (வச 12-14) —

*... பிள்ளைகள் ... வாலிபர் ... தந்தையர் ...*

இளவயது ... நடுவயது ... முதிர்வயது

பரிசுத்தத்திற்கான வாஞ்சையைத் தளர்த்தவே கூடாது.

சோதிக்கப்பட முடியாத இளமையுமில்லை, முதுமையுமில்லை!

☐ எப்பொழுதும் போராடிக்கொண்டேயிருங்கள் —

எபி 12:4; வெளி 12:11 ... *பாவத்திற்கு எதிராய் இரத்தம் சிந்துதல்*
(சோதனை ஓர் யுத்தம்தான்!)

மத் 5:10 ... 8ஆம் பாக்கிய வசனம்: *நீதியினிமித்தம் துன்பம்*
1 பேது 3:14,15அ ... *நீதிக்காய்ப் பாடனுபவிப்பு ... பயப்படாமல்...*
நீதி 28:14 ... *எப்பொழுதும் பயபக்தி ... பாக்கியவான்*
வச 13 ... *மறைக்கிறவன் ... அறிக்கையிட்டு விட்டுவிடுகிறவன்*

☐ ஒருபோதும் திருப்தியடையாதீர்கள் —

நீதி 20:9 ... *துப்புரவானேன் என்று யார் சொல்ல முடியும்?*
யோபு 42:5,6 ... *என் காதுகள் ... என் கண்கள் ... மனந்திரும்புகிறேன்*
பிலி 3:12 ... *அடைந்தாயிற்று என்று எண்ணாமல் ... தொடர்கிறேன்*

முடிவு நெருங்க நெருங்க, கூடுதல் விழிப்பாயிருங்கள் —
2 பேது 3:11,12 ... *பூமி வெந்து அழிந்து ... பரிசுத்த நடக்கை ...*
ரோ 13:11,12 ... *இரட்சிப்பு சமீபம் ... தூக்கம் ... வெளிச்சம்*

■ முடிவாக,

இறைவாக்குகளைக் கவனிப்போம்:

☐ நீதி 4:18 ... *நீதிமானின் பாதை ... அதிகமதிகமாய்ப் பிரகாசம்*

☐ 2 கொரி 3:18...*ஆவியானவராலே...சாயல்...மகிமையின்மேல் மகிமை*

☐ 1 தெச 5:23 ... *ஆவி, ஆத்துமா, உடல் முற்றிலும் பரிசுத்தம்*
(முழுவதுமாய்ப் பரிசுத்தமாகுதல்)

ஏன்? தேவனது அழைப்பு (1 தெச 4:7)
அதை நிறைவேற்றுகிறார் (1 தெச 5:24)

இந்தக் கட்டத்தில்தான் நமது ''நிலையும்'' ''நடையும்''
ஒன்றாகும்! (பாடம் 2)

விண்ணக மணமகனுக்குப் பூரண மணமகள் —
எபே 5:27 ... *கறைதிரையற்ற ... பிழையற்ற ...*

கல்யாணப் புடவை —
வெளி 19:7 ... *மணமகள்* ***தன்னை*** *ஆயத்தப்படுத்தினாள்!*
:8 ... *மெல்லிய ஆடை* ***அவளுக்கு*** *அளிக்கப்பட்டது!*

(பார்க்க: பக்கங்கள் 332-344, 540-542, 778-780)